1. முன்னுரை

1.1. ஆய்வுத் தலைப்பு

1.2. தலைப்புத் தேர்வுக்கான காரணம்

1.3. ஆய்வு நோக்கம்

1.4. ஆய்வுக் கருதுகோள்

1.5. ஆய்வு எல்லை

1.6. ஆய்வுக்களம்

1.7. ஆய்வு மூலங்கள்

1.8. ஆய்வு முன்னோடிகள்

1.9. ஆய்வு அணுகுமுறைகள்

1.10. ஆய்வு அமைப்பு

1.10.1. ஆய்வு முன்னுரை

1.10.2. சவ்வாதுமலை அமைவிடமும் இருப்பிடச் சூழலும்

1.10.3. பழங்குடிச் சமூகமும் மலையாளிகளும்

1.10.4. மலையாளிகளின் வாழ்வியல்சார் பண்பாடுகள்

1.10.5. கால மாறுபாடும் மலையாளிகளின் பண்பாட்டுப் புத்தாக்கங்களும்

1.10.6. முடிவுரை

1.11. துணைநூற் பட்டியல்

1.12. பின்னிணைப்புகள்

## 1. முன்னுரை

பண்டைத் தமிழ்ப் பெருநிலங்களில் முதன்மையானதாகத் திகழ்வது குறிஞ்சி நிலம் ஆகும். இந்நிலத்தினை மையமாகக்கொண்டு தமது வாழ்வியலை மேற்கொண்டு வருபவர்கள் பழங்குடி மக்கள். தமக்கெனத் தனித்தப் பண்பாட்டு அடையாளங்களுடன் வாழும் இப்பழங்குடி மக்களின் வாழ்வாதார முறைகள், கூர்நோக்குச் சிந்தனை மரபுகள் மற்றும் ஆளுமைத்திறன் போன்றவை நாகரிக வளர்ச்சியினாலும், அரசியல், பொருளாதாரக் காரணங்களினாலும் சிதைக்கப்பட்டு வருகின்றன.

உலகில் பல்வேறு வகையான மக்கள் இனம் வாழ்ந்து வந்தாலும் நீண்ட நெடிய பரிணாம வளர்ச்சியில் மிகவும் தொன்மையான பண்பாட்டைப் பின்பற்றுபவர்களாகவும் தொன்மையைப் பாதுகாப்பவர்களாகவும் திகழ்பவர்கள் பழங்குடிகள். ஆனால் இன்றைய நவீனமயமாக்கல் சூழல், இப்பழங்குடி மக்களின் பண்பாட்டு மரபுகளின் தனித்துவத்தை மாற்றி ஒற்றைத்தன்மை கொண்ட வாழ்க்கைக்கு உட்படுத்தி வருகின்றது. எனினும் இத்தகு தாக்குதல்களை எதிர்கொண்டு தமக்குரிய வாழ்வியல் மரபுகளைத் தக்க வைத்துக் கொள்ளும் வல்லமையுடைய சில பழங்குடிச் சமூகங்களும் உலகில் இருப்பதைக் காணமுடிகின்றன. இப்பழங்குடிச் சமூகங்களை இனங்கண்டு ஆராய்வதன் மூலம் அவர்களின் தொன்மையான பண்பாட்டு அடையாளங்களை மீட்டெடுக்க இயலும். இன்றையத் தமிழ்ச் சமூகச் சூழலில் மலையாளி இனப் பழங்குடிச் சமூகம் தமது தொல்குடி மரபுகளைக் காத்து வருவது குறிப்பிடத்தக்கது. இம்மக்களின் வாழ்வியலை ஆவணப்படுத்துவது என்ற அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

### 1.1. ஆய்வுத் தலைப்பு

தமிழகத்தின் கிழக்கு மலைத்தொடர் காடுகளில் வாழிடங்களை அமைத்துக் கொண்டு பல்வேறு பழங்குடி இனத்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுள் மலையாளி இனமும் ஒன்றாகும். இயற்கையோடு இணைந்து வாழ்ந்து வரும் இம்மக்களின் வாழ்வியலை முழுநிலையில் ஆய்வு செய்யும் பொருட்டு **‘சவ்வாதுமலை மலையாளிகளின் வாழ்வியல் முறைகள்’** என்னும் தலைப்புத் தெரிவு செய்யப்பட்டது.

### 1.2. ஆய்வுத் தலைப்புத் தேர்வுக்கான காரணம்

இன்று வளர்ந்து வரும் நாட்டார் ஆய்வுகளில் பல்வேறு வகையான சமூகங்களைப் பற்றிய ஆய்வேடுகளும், ஆய்வுக் கட்டுரைகளும் வெளிவந்த வண்ணம் உள்ளன. இவற்றுள் பழங்குடிகளும் விதிவிலக்கல்ல. இருப்பினும் இன்றைய நவீனமயமாக்கல் சூழலிலும்

மலையாளியினப் பழங்குடியினரின் பண்பாட்டு மரபுகள் பிற இன மக்களிடமிருந்து தனித்துக் காணப்படுகின்றன. இம்மக்களின் பண்பாட்டு மரபுகள் தனித்து நிற்பதன் காரணம் என்ன என்பதை ஆராயவேண்டிய தேவை உள்ளது. மேலும் இவ்வினத்தைப் பற்றிய ஆய்வும் இதுவரை முறையாக நடைபெறவில்லை. எனவே, இவர்களின் வரலாறு, வாழ்வியல் பின்புலம், வழக்காறுகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், பொருளாதாரம், கல்வி மற்றும் இம்மக்களின் இன்றைய நிலைப்பாடுகள் போன்றவற்றை முறையான ஆய்வின் மூலம் வெளிக்கொணர வேண்டும் என்ற அடிப்படையில் **'சவ்வாதுமலை மலையாளிகளின் வாழ்வியல் முறைகள்'** என்னும் தலைப்புத் தெரிவு செய்யப்பட்டது.

## 1.3. ஆய்வு நோக்கம்

இந்த ஆய்வு பின்வரும் நோக்கங்களை மையமாகக்கொண்டு அமைகிறது.

1. சவ்வாதுமலைப் பகுதிகளில் வாழ்ந்து வரும் மலையாளி இனப் பழங்குடி மக்களை இனம் கண்டறிதல்.
2. தொல்குடி மலையாளிகளின் வரலாறு, பண்பாடுகள் தொடர்பான தரவுகளைச் சேகரித்தல்.
3. தரவுகளின்வழி மலையாளி இனப் பழங்குடி மக்களின் வாழ்வியல் முறைகளைச் சமூகவியல் நோக்கில் வெளிக்கொணர்தல்.

## 1.4. கருதுகோள்

தற்காலச் சமூக, அறிவியல் மாற்றங்களினாலும், பண்பாட்டுக் கலப்புகளினாலும் மலையாளிகளின் வாழ்வியல் முறைகளில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இருப்பினும் அவர்கள் தங்களின் பண்பாட்டு அடையாளங்களைத் தக்கவைக்கும் பொருட்டுச் சிற்சில மாற்றங்களை ஏற்றுக்கொண்டு தம் மரபு சார்ந்த அடிப்படைப் பண்பாட்டுக் கூறுகளை இன்றும் மரபு மாறாமல் பின்பற்றி வருகின்றனர் என்ற கருதுகோளின் அடிப்படையில் இவ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

## 1.5. ஆய்வு எல்லை

ஆய்விற்கு எடுத்துக்கொண்ட சவ்வாதுமலையில் 250 க்கும் மேற்பட்ட சிற்றூர்கள் உள்ளன. இங்கு வாழிடங்களை அமைத்துக் கொண்டு பல்வேறு பழங்குடி இனத்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவற்றுள் மிகுதியான எண்ணிக்கையில் இருப்பவர்கள் மலையாளி இனப் பழங்குடி மக்கள் ஆவர். திசையின் அடிப்படையில் மலையின் வடக்குப் பகுதியில் இருப்பவர்கள் தங்களை **'வடக்கத்திக் கவுண்டர்'** அல்லது **காராளக் கவுண்டர்'** என்றும்,

மலையின் தெற்குப்பகுதியில் இருப்பவர்கள் **'வெள்ளாளக் கவுண்டர்'** என்றும், அழைக்கப்படுகின்றனர். சேலம், ஈரோடு, கோவை மாவட்டங்களில் மிகுதியாக வாழும் கவுண்டர் சமுகத்திலும் **'வேட்டுவக் கவுண்டர்', 'வெள்ளாளக் கவுண்டர்'** என்று இருபிரிவுகள் உள்ளன. ஆனால் சவ்வாதுமலையில் வாழும் வெள்ளாளக் கவுண்டருக்கும் மேற்கூறிய மாவட்டங்களில் வாழும் வெள்ளாளக் கவுண்டருக்கும் இடையே எவ்வித உறவும் இல்லை. சவ்வாதுமலை வெள்ளாளக் கவுண்டர்கள் மலையில் வாழ்வதால் 'மலையாளிகள்' என்றும் 'மலைக்கவுண்டர்கள்' என்றும் அழைக்கப்படுகின்றனர். இங்கு ஆய்வின் காலம் கருதி மலையின் தெற்குப்பகுதியில் வாழும் **'வெள்ளாளக் கவுண்டர்கள்'** என்று அழைக்கப்படும் மலையாளி இனப் பழங்குடி மக்கள் வாழும் 45 சிற்றூர்கள் மட்டும் ஆய்வுக்குரிய எல்லையாக எடுத்துக் கொள்ளப்பட்டன.

## 1.6. ஆய்வு மூலங்கள்

இந்த ஆய்விற்கு முதன்மை மூலங்கள், துணைமை மூலங்கள் என இருவகையில் ஆய்வு மூலங்கள் அமைகின்றன.

### 1.6.1. முதன்மை மூலங்கள்

ஆய்வுக்கு எல்லையாக வரையறுக்கப்பட்டுள்ள நாற்பத்தைந்து குடியிருப்புக்களை உறைவிடமாகக் கொண்டுள்ள மலையாளி இனப் பழங்குடியினரிடம் கள ஆய்வுத் தரவுகளின் வழிபட்ட வாழ்வியல் செய்திகள், அதனுடன் தொடர்புடைய பிற நடைமுறைப் பழக்கவழக்கங்கள், சடங்குகள், நம்பிக்கைகள், கலைகள் மற்றும் புழங்குப் பொருட்கள் ஆகியன முதன்மை மூலங்களாக அமைகின்றன.

### 1.6.2. துணைமை மூலங்கள்

மலையாளி இனப் பழங்குடியினர் தொடர்பாக வெளிவந்துள்ள ஆய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், பல்கலைக் கழகங்களில் மலையாளி இன மக்கள் மற்றும் பழங்குடிகளைப் பற்றி நிகழ்த்திய முன் ஆய்வுகள், இதழ்களில் வெளியான கட்டுரைகள், அரசின் அறிக்கைகள் மற்றும் பிற இனவரைவியல் ஆய்வு நூல்கள் போன்றவை இந்த ஆய்வின் துணைமைச் சான்றுகளாக அமைகின்றன.

## 1.7. ஆய்வுக்களம்

இந்த ஆய்விற்குத் திருவண்ணாமலை மற்றும் வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த சவ்வாதுமலையில், மலையாளிகள் வாழும் பகுதிகள் மட்டும் ஆய்வுக் களங்களாக

அமைகின்றன. மேலும், ஆய்வாளர் சவ்வாதுமலை மலையாளி இனத்தில் பிறந்து வளர்ந்து வருபவர் என்பதாலும், அவர் தம் இனம் பற்றிய வாழ்வியல் முறையினை நன்கு அறிந்தவர் என்பதினாலும், தகவலாளிகள் கூறக்கூடிய களப்பணித் தொடர்பான செய்திகளை எளிதில் புரிந்துகொள்ள இயலும் என்றதன் அடிப்படையிலும் இப்பகுதிகள் ஆய்வுக்கான களங்களாக எடுத்துக்கொள்ளப்பட்டன.

## 1.8. முன்னாய்வுகள்

இந்தியாவில் மேலை நாட்டார் வருகைக்குப் பின்னரே பழங்குடியினர் குறித்த ஆய்வறிக்கைகளும், ஆய்வு நூல்களும் வெளிவரத் தொடங்கின. அதன் பயனாக இந்நாட்டிலுள்ள சமூகவியலறிஞர்களும் இத்துறையின் மீது நாட்டம் செலுத்தினர். இதன் காரணமாக இந்தியாவில் வாழும் பல்வேறு வகையான பழங்குடி இன மக்கள் தொடர்பான ஆய்வுகளும், வெளிவந்துள்ளன. இவற்றுள் சவ்வாதுமலை மலையாளிகளின் வாழ்வியல் பற்றி முதன் முதலில் **'எட்கர் தர்ஸ்டன்'** என்பவரால் ஆய்வு செய்யப்பட்ட **"தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்" (1986), அ.அண்ணாமலை** என்பவரின் **"சவ்வாதுமலை கல்வி நிலை பற்றிய ஆய்வேடு" (2005), மு.ரவி** என்பவரால் உருவாக்கப்பட்ட **"சவ்வாது மலைவாழ் மக்களின் வாழ்வியல்" (2008), சி. நல்லத்தம்பி** அவர்களின் **"தமிழகப் பழங்குடி வழக்காற்றியல் கல்வராயன் மலைப் பழங்குடிகள்" (2011)** ஆகிய நான்கு நூல்களும் மலையாளிகள் குறித்த முதன்மையான ஆய்வு நூல்களாகும்.

இவையன்றிப் பல்கலைக்கழக அளவில் முனைவர் பட்டத்திற்காக ஆய்வு செய்யப்பட்ட **இரா.தயாளசங்கர்** என்பவரின் **"சித்தேரி மலையாளிகளின் வாழ்வும் பண்பாடும்"** (2010), என்ற ஆய்வேடும், ஆய்வியல் நிறைஞர் பட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட **கா.ஆறுமுகம்** என்பவரின் **"ஏலகிரி மலைவாழ் மக்கள் - மலையாளிகளின் வாழ்வியல்" (2009)**, முதுகலைப் பட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட **பி.ஜான்பிரிட்டோ** என்பவரின் **"சவ்வாதுமலைப் புலியூர் தெருக்கூத்து நிகழ்த்துதலில் பவூனின் மற்றொன்று விரித்தல்" (1990), கா. ஆறுமுகம்** என்பவரின் **"சவ்வாது மலைவாழ் மக்களின் கலை வடிவங்கள்"(2007)** போன்றவைகளும் முன் ஆய்வாகக் கொள்ளப்படுகின்றன.

'எட்கர் தர்ஸ்டன்', 'ரவி' ஆகியோரின் ஆய்வுகள் பண்பாட்டு சார்ந்ததாக அமையாமல் மலையாளிகள் குறித்த பொதுவான ஆய்வாக அமைந்துள்ளது. சில ஆய்வுகள் கலைகள் மற்றும் கல்வியை மட்டும் எடுத்து ஆராயப்பட்டுள்ளன. ஆனால் வெள்ளாளக் கவுண்டர் என அழைக்கப்படும் மலையாளிகளின் வாழ்வியலை உள்ளடக்கிய ஓர் பாண்பாட்டு ஆய்வாக இந்த ஆய்வு அமைந்துள்ளது.

## 1.9. ஆய்வு அணுகுமுறை

ஆய்வுத்துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியின் காரணமாகத் துறைதோறும் பல்வேறு அணுகுமுறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. இலக்கிய ஆய்வில் அமைப்பியல் ஆய்வு இன்று தனிச்சிறப்புப் பெற்றுள்ளது. ஏனைய அறிவியல் ஆய்வுகளைப் போன்று நாட்டார் வழக்காற்றியல் ஆய்விலும் இத்தகைய அணுகுமுறைகளைப் பயன்படுத்திப் பல உண்மைகளை வெளிக்கொணர முயற்சிகள் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. 'சவ்வாதுமலை மலையாளிகளின் வாழ்வியல் முறைகள்' எனும் இந்த ஆய்வு சமூகவியல் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பழங்குடிகளின் ஆய்வுகளிலிருந்து மலையாளிகளின் வாழ்க்கை முறைக் குறித்தத் தனி ஆய்வாக இது அமைந்தாலும் ஆய்வின் முடிவுகள் ஏனைய பழங்குடி மக்களின் ஆய்வுக்கும் துணை நிற்பதாகும். மேலும் உலகளவில் இருக்கும் பழங்குடி மக்களின் வாழ்வியலை மீட்டுருவாக்கம் செய்யவும் இத்தகைய ஆய்வுகள் உதவும்

## 1.10. இயல் அமைப்பு

இந்த ஆய்வு முன்னுரை, முடிவுரை உட்பட ஏழு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

1. முன்னுரை
2. சவ்வாதுமலை அமைவிடமும் இருப்பிடச் சூழலும்
3. மலையாளிகளும் சமூகமும்
4. மலையாளிகளின் தொழில்சார் பண்பாடுகள்
5. மலையாளிகளின் சடங்குகளும் நம்பிக்கைகளும்
6. கால மாறுபாடும் மலையாளிகளின் பண்பாட்டுப் புத்தாக்கங்களும்
7. முடிவுரை

### 1.10.1. இயல் : 1

**'முன்னுரை'** என்னும் முதல் இயலில் ஆய்வுத் தலைப்பு, ஆய்வுத் தலைப்புத் தேர்வுக்கான காரணம், ஆய்வு நோக்கம், கருதுகோள், ஆய்வின் எல்லை, ஆய்வு மூலங்கள், ஆய்வுக்களம், முன்னாய்வுகள், ஆய்வு அணுகுமுறை, ஆய்வேட்டின் இயல் அமைப்புமுறை பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.

### 1.10.2. இயல் : 2

**'சவ்வாதுமலை அமைவிடமும் இருப்பிடச் சூழலும்'** என்னும் இரண்டாவது இயலில், சவ்வாது மலையின் அமைவிடம், சவ்வாது மலையின் பெயர்க் காரணம், சவ்வாது

மலையின் பண்டைய வரலாறு, கடற்பரப்பிலிருந்து மலையின் உயரம், சவ்வாது மலையின் உட்பிரிவுகள், நிலப்பரப்பு, தட்பவெப்ப நிலை, மலையின் இயற்கை வளம், மலையில் உற்பத்தியாகும் ஆறுகள், சுற்றுலா மையங்கள், அங்கு வாழும் வன விலங்குகள், நீர்வளம் தரும் அணைகள், இவைகளோடு மலையாளிகள் கொண்டுள்ள தொடர்புகள், போக்குவரத்து வசதி, மற்றும் அங்கு வாழும் பிற பழங்குடிகள் தொடர்பான செய்திகள் இங்கு ஆராயப்பட்டுள்ளன.

1.10.3. **இயல் : 3**

**'மலையாளிகளும் சமூகமும்'** என்னும் மூன்றாவது இயலில் பழங்குடிகள், பழங்குடி என்னும் சொல் விளக்கம், அறிஞர்கள் தரும் விளக்கங்கள், இந்தியப் பழங்குடிகள், தமிழகப் பழங்குடிகள் பற்றிய பொதுவான தன்மைகள், மலையாளி சொல் விளக்கம், சவ்வாது மலைக்கு மலையாளி இனப்பரவல், இடத்தேர்வு, வீடுகளின் அமைப்பு, குடும்ப அமைப்பு, சமூக அமைப்பு, அரசியலமைப்புப் போன்றவைகள் ஆராயப்படுகின்றன. மேலும் இவர்கள் பேசும் மொழி, வாழ்க்கை முறை, ஆண்கள் மற்றும் பெண்களின் தோற்றம், ஆடை அணிகலன்கள், கல்வி நிலை போன்ற செய்திகளைத் தொகுத்து ஆராய்வதாக இந்த இயல் அமைகின்றது.

1.10.4. **இயல் : 4**

**'மலையாளிகளின் தொழில்சார் பண்பாடுகள்'** என்னும் நான்காவது இயலில், மலையாளிகளின் தொடக்க காலத் தொழில்களான வேட்டையாடுதல், காடுபடுப் பொருள் சேகரித்தல், வேளாண்மை செய்தல், கால்நடை வளர்த்தல் மற்றும் பிற தொழில்கள், தொழிலுக்குப் பயன்படும் கருவிகள் மற்றும் தொழில் சார்ந்த சடங்குகள் குறித்து ஆராய்கிறது. மேலும், மலையாளிகளைப் பாதிக்கும் நோய்கள்; அந்நோய் பரவுவதற்கான காரணங்கள்; மரபார்ந்த மூலிகை மருத்துவம்; அவை பற்றிய நம்பிக்கைகள் ஆகியனவும் குறிப்பிடப்படுகின்றன. மேலும், காடுகளில் மலையாளிகள் எதிர்நோக்கும் துன்பங்கள், அவர்களின் வாழ்வியல் சார்ந்த பொதுத் தன்மைகள் போன்றவை ஆராயப்படுகின்றன.

1.10.5. **இயல் : 5**

**'மலையாளிகளின் சடங்குகளும் நம்பிக்கைகளும்'** என்னும் ஐந்தாவது இயலில் மலையாளிகள் பிறப்பு முதல் இறப்பு வரை செய்யக் கூடிய சடங்குகளான குழந்தை பிறப்பு, பெயர் வைத்தல், காது குத்துதல், பூப்புச் சடங்கு, திருமணம், இறப்பு மற்றும் பிற வாழ்வியல்சார் சடங்குகள் ஆராயப்படுகின்றன. மேலும் அவர்களின் பழக்கவழக்கங்கள்,

நம்பிக்கைகள், கலைகள், புழங்குப் பொருட்கள், இவ்வின மக்கள் கொண்டாடும் விழாக்கள், வழிபாடுகள் அவற்றிற்குச் செய்யப்படும் சடங்குகள் போன்ற செய்திகளும் தொகுத்து ஆராயப்பட்டுள்ளன.

1.10.6. **இயல் : 6**

**'கால மாறுபாடும் மலையாளிகளின் பண்பாட்டுப் புத்தாக்கங்களும்'** என்னும் ஆறாவது இயலில், மலையாளிகளின் நவீனத் தொழில் முறைகளின் இன்றைய நிலை, சமூக அமைப்பில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள், உணவு மற்றும் வீடுகளின் அமைப்பில் மாற்றங்கள், கல்வி வளர்ச்சி, சமூகச் சடங்குகளில் நிகழ்ந்துள்ள மாற்றங்கள், பொருளாதார வளர்ச்சி, படித்த இளைஞர்களிடையே ஏற்பட்டுள்ள மாற்றங்கள், தகவல் தொடர்பு சாதனங்களால் ஏற்பட்ட மலையாளி இனமக்களின் வளர்ச்சிநிலை, மகளிர் சுயஉதவிக் குழுக்கள், மலையாளிகளின் நல்வாழ்வுச் சங்கம், மருத்துவத்தில் நிகழ்ந்த மாற்றம், இம்மக்களுக்கு அரசின் திட்டங்களால் விழைந்த மாற்றங்கள் போன்றவற்றை ஆராய்வதாக இந்த இயல் அமைகின்றது.

1.10.7. **இயல் : 7**

**'முடிவுரை'** என்னும் இறுதி இயலில், ஒவ்வொரு இயலிலும் கண்டறியப்பட்ட முடிவுகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. மேலும், மேலாய்வுக்கான களங்களும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

### 1.11. துணைநூற் பட்டியல்

ஆய்வுத் தொடர்பாகச் சேகரிக்கப்பட்ட நூல்கள், கட்டுரைகள், ஆய்வேடுகள் போன்றவை அகரநிரல்படுத்தித் துணைநூற் பட்டியலாகத் தரப்பட்டுள்ளன.

### 1.12. பின்னிணைப்புகள்

பின்னிணைப்புப் பகுதியில் தகவலாளிகள் பட்டியல், களப்பணி அனுபவங்கள், மலையாளிகள் வாழும் குடியிருப்புக்களைச் சுட்டும் வரைபடம், வாழ்வியல் சார்ந்த நிழற்படங்கள், மலையாளிகளின் வழக்குச் சொற்கள் ஆகியனவும் இடம்பெறுகின்றன.